**செய்தி வெளியீடு எண் : 090** **நாள் : 13.01.2023**

**மூத்த நரம்பியல் மருத்துவர் திரு. நாகராஜன் வெங்கட்ராமன் அவர்களின் மறைவையொட்டி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி.**

மூத்த நரம்பியல் மருத்துவர் திரு. நாகராஜன் வெங்கட்ராமன் அவர்கள் மறைந்தார் என்ற செய்திகேட்டு மிகவும் வருத்தமடைந்தேன்.

தேசிய நரம்பியல் அறிவியல் ஆராய்ச்சிக் குழுத் தலைவர், டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்தின் மதிப்புறு பேராசிரியர், மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனையின் நெறிமுறைக்குழுத் தலைவர் உள்ளிட்ட பல உயர் பொறுப்புகளை வகித்து வந்த திரு. நாகராஜன் அவர்கள் மதுரை AIIMS மருத்துவமனையின் தலைவராக திரு. நாகராஜன் அவர்கள் சில மாதங்களுக்கு முன்பு நியமிக்கப்பட்டிருந்தார்.

அவரை இழந்து வாடும் மருமகன் திரு. ராதாகிருஷ்ணன் உள்ளிட்ட குடும்பத்தாருக்கும் மருத்துவத் துறையினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கல்களையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in